# 1 அழகு நிலா

## அலகு முன்னுரை

மனித வாழ்வை வளப்படுத்துவதில் இயற்கை பெரும் பங்கு வகிக்கிறது. இயற்கைச் சூழல்களைப் பார்க்கும்போது அளப்பறிய மகிழ்ச்சியில் மூழ்கித் திளைக்கிறோம். ஆதிகால மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான் என்பது நாம் அறிந்த உண்மை. எனவே அவன் மிகவும் ஆரோக்கியமாகத் திகழ்ந்தான். இயற்கையைத் தெரிந்து கொண்டு அதனை விரும்பிப் பாதுகாக்க வேண்டிய சூழலில் நாம் தற்போது உள்ளோம். பூமியைப் பசுமையாக வைப்பதில் இயற்கைக்கு முக்கிய இடமுண்டு. மரம், செடி, கொடி, பூ, கல், நதி, மலை இப்படிக் காணுமிடமெங்கும் இயற்கை பரந்து விரிந்துள்ளது. மனிதனும் இயற்கையின் ஓர் அம்சமே. ஆனால் இயற்கையை விஞ்சும் செயல்களில் தற்போது அவன் ஈடுபடுகிறான் என்பது வருத்தத்திற்குரியது. மனிதன் இயற்கையைத் தீண்டும்போது அதுவும் நம்மைத் தீண்டத் துணிகிறது. இன்று இயற்கை பல்வேறு வழிகளில் சுரண்டப்பட்டு வருகிறது. குளங்களையும், வயல்களையும் நிரப்பியும், பாறைகளையும் மலைகளையும் உடைத்தும் இயற்கை சுரண்டப்படுகிறது. இயற்கை மீது ஆழ்ந்த ஈடுபாடும் அதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலையும் உருவாகவேண்டும். அது பல்வகைச் செல்வங்களை உள்ளடக்கியது. இயற்கை மாசடைதலால் பெரும் தீங்கு ஏற்படும் என்னும் கருத்துகளை உள்ளடக்கி இவ்வலகு வடிவமைக்கப் பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

- ஐவகை நிலங்களின் இயற்கை அழகு பற்றி அறிந்து கவிதை எழுதுகிறார்கள்.
- கவிதையை வாசித்து மையக்கருத்தினை அறிந்து நயம் பாராட்டி எழுதுகிறார்கள்.
- இயற்கை பல்வேறு சுரண்டல்களுக்கு ஆளாவதைப் பற்றி விழிப்புணர்வு முகாமில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை தயார் செய்கிறார்கள்.
- இயற்கை வளம் பற்றிக் கட்டுரை எழுதுகிறார்கள்.

## அலகு வலைச்சட்டம் (அழகு நிலா)

| கருத்துகள் /திறன்கள் | செயல்பாடுகள் | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • இயற்கை மனித வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தது. | • கலந்துரையாடல்<br>• குறிப்பு எழுதுதல்<br>• தொகுத்தல்<br>• கவிதை எழுதுதல் | • ஐவகை நிலங்களின் இயற்கை அழகு பற்றி அறிந்து கவிதை எழுதுகிறார்கள். |
| • இயற்கை பல்வகைச் செல்வங்களின் கருவூலம். | • கருத்துகளை வெளியிடுதல்<br>• ஒப்பீட்டுக் குறிப்பு எழுதச் செய்தல்<br>• கட்டுரை எழுதுதல் | • இயற்கையின் வளம் பற்றிக் கட்டுரை எழுதுகிறார்கள். |
| • சுற்றுச்சூழல் மாசடைதல் இயற்கைக்குப் பெரும் சவாலாக உள்ளது. | • படங்களைக் காண்பித்துக் கருத்து வினவுதல்<br>• வாசித்துக் கருத்துகளை வெளியிடச் செய்தல்<br>• குறிப்பு எழுதுதல்<br>• சொற்பொழிவு தயாரித்தல் | • இயற்கை பல்வேறு சுரண்டலுக்கு ஆளாவதைப் பற்றி விழிப்புணர்வு முகாமில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை தயார் செய்கிறார்கள். |
| | • பாடலை வாசித்துக் கலந்துரையாடல்<br>• நயம்பாராட்டி எழுதுதல் | • கவிதையினை வாசித்து மையக் கருத்தினை அறிந்து நயம் பாராட்டி எழுதுகிறார்கள். |

*காலம்*

இவ்வலகைக் கற்பிக்கத் தேவையான காலம் 17 பிரிவேளைகள். (சுமார்)

**நுழைவுச் செயல்பாடு**

ICT பயன்படுத்தி ஐவகை நிலங்களை உள்ளடக்கிய படங்களைக் காண்பித்து அவற்றுள் அடங்கியுள்ள கருத்துகளைப் பட்டியிலிடச் செய்யலாம்.

ஐவகை நிலங்கள் எவை? அவற்றின் தனித்தன்மைகள் என்னென்ன?

ஒவ்வொரு நிலத்திலும் வாழக்கூடிய மக்கள் அவர்களின் வாழ்க்கை நிலை ஆகியவை குறித்த வினாக்கள் எழுப்பிக் கலந்துரையாடல் நடத்தலாம். கலந்துரையாடலின் அடிப்படையில் பாடப்பகுதிக்கு அழைத்துச் செல்லலாம்.

## கற்றல் அடைவு

- ஐவகை நிலங்களில் இயற்கையின் அழகு பற்றி அறிந்து கவிதை எழுதுகிறார்கள்.

**கலந்துரையாடல்**

பழந்தமிழக இயற்கை என்னும் பாடப்பகுதியினைத் தனியாகவும் குழுவாகவும் வாசித்து ஐவகை நிலங்களில் இடம்பெற்றுள்ள இயற்கை வருணனை, வளம், அவற்றின் தனித்தன்மைகள் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடல் நடத்துதல்.

**குறிப்பு எழுதுதல்**

கலந்துரையாடலின் அடிப்படையில் கிடைத்த செய்திகளை வரிசைப்படுத்திக் குறிப்பாக எழுதுதல்.

- ஐவகை நிலக்காட்சி
- அழகு
- வளம்
- மக்களின் வாழ்க்கை நிலை
- உயிரினங்களின் வாழ்வியல்

ஆகியவற்றைக் குறிப்பில் உட்படுத்தலாம்.

**தொகுத்தல்**

குறிப்புகளை ஒழுங்குப்படுத்தித் தொகுக்கச் செய்யலாம்.

**கவிதை எழுதுதல்**

மேற்குறிப்பிட்ட செயல்வரிசைகளின் அடிப்படையில் கருத்துகளை உள்ளடக்கி ஐவகை நிலங்களின் பெருமைகளைக் கூறும் கவிதை எழுதச் செய்யலாம். வேறுசில கவிதைகளையும் பார்வையிட உதவலாம்.

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்து
- வருணனை
- சொல்லாட்சி
- இனிமை

**பாடப்பகுதி**

- பழந்தமிழக இயற்கை

## கற்றல் அடைவு

- இயற்கையின் வளம் பற்றிக் கட்டுரை எழுதுகிறார்கள்.

**கருத்துகளை வெளியிடுதல்**

கம்பராமாயணம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள **பாலகாண்டம்** (ஆசிரியரின் உதவியுடன்) மற்றும் **பரவசப்படுத்தும் பருந்துப் பாறை** என்னும் பாடங்களைத் தனியாகவும் குழுவாகவும் வாசித்து அவற்றுள் கூறப்படும் கருத்துகளை உட்கொண்டு வெளியிடச் செய்யலாம்.

**ஒப்பீட்டுக் குறிப்பு எழுதச் செய்தல்**

இதுபோல் உங்கள் பகுதிகளில் நீங்கள் கண்டுகளித்த இயற்கை விளையாட்டினைப் பாடப்பகுதியோடு ஒப்பிட்டுக் குறிப்பு எழுதச் செய்யலாம். குறிப்புகளை மாணவர்கள் கூற, ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக் கலந்துரையாடல் நடத்தலாம்.

**கட்டுரை எழுதுதல்**

- ஐவகை நிலங்களில் இயற்கை
- இயற்கை விருந்து
- இயற்கையின் பெருமை

போன்ற குறிப்புகளின் அடிப்படையில் கட்டுரை எழுதலாம்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கருத்து
- மொழிநடை
- அமைப்பு
- மேற்கோள்
- சொல்லாட்சி

**பாடப்பகுதி**

- பரவசப்படுத்தும் பருந்துப் பாறை
- பாலகாண்டம் (கம்பராமாயணம்)

## கற்றல் அடைவு

- இயற்கை பல்வேறு சுரண்டலுக்கு ஆளாவதைப் பற்றி விழிப்புணர்வு முகாமில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை தயார் செய்கிறார்கள்.

**படங்களைக் காண்பித்துக் கருத்து வினவுதல்**

இன்று இயற்கை எவ்வாறு ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் பத்திரிகைச் செய்திகளையும் படங்களையும் காண்பித்துக் கருத்துகளை வினவி வெளியிடச் செய்தல்.

**வாசித்துக் கருத்துகளை வெளியிடச் செய்தல்**

'சூழ்நிலைச் சீர்கேடு', மற்றும் நெல்லை மீரானின் 'புதியதாய்ப் பிறந்த வீடு' ஆகிய பாடப்பகுதிகளை தனியாகவும் குழுவாகவும் வாசிக்கச் செய்து, இன்றையச் சூழலில் இயற்கை எவ்வாறெல்லாம் மாசுபடுகிறது என்ற வினாவிற்கு விடைகாணும் பொருட்டுப் பாடப்பகுதியோடு பொருத்தமுறக் கருத்துகளை வெளியிடச் செய்தல்.

**குறிப்பு எழுதுதல்**

மேற்கூறியவற்றின் அடிப்படையில் கிடைத்த கருத்துகளைக் குறிப்பாக எழுதச் செய்தல்.

**சொற்பொழிவு தயாரித்தல்**

குறிப்புகளின் அடிப்படையில் விழிப்புணர்வு முகாமில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுரை தயார் செய்யலாம்.

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்து
- அமைப்பு
- மேற்கோள்
- சொல்லாட்சி
- முடிவு

**பாடப்பகுதி**

- சூழ்நிலைச் சீர்கேடு, புதியதாய்ப் பிறந்த வீடு.

## கற்றல் அடைவு

- கவிதையை வாசித்து மையக்கருத்தினை அறிந்து நயம் பாராட்டி எழுதுகிறார்கள்.

**பாடலை வாசித்துக் கலந்துரையாடல்**

கவிஞர் வைரமுத்து எழுதிய 'மரம்போல் வாழ்' என்னும் கவிதையினைத் தனியாகவும்/ குழுவாகவும் இரண்டு மூன்று முறை வாசிக்கச் செய்தல். பாடலின் கருத்தை உட் கொண்டனரா என்பதை அறியும் பொருட்டுக் கீழ் வரும் வினாக்களை வினவுதல்

- இப்பாடலின் மூலம் முதன்மையாக வெளிப்படும் கருத்து யாது?
- மரங்களின் நன்மைகள் யாவை?
- கவிஞர் கையாண்டுள்ள உத்திகள் யாவை?

போன்ற வினாக்களின் வழி ஒரு வகுப்பறைக் கலந்துரையாடல் நடத்தலாம்.

**நயம் பாராட்டி எழுதுதல்**

கலந்துரையாடலின் அடிப்படையில்,

- மையக் கருத்து
- சொல் நயம்
- பொருள் நயம்
- மோனை நயம்
- முரண்
- அணிநயம்
- இயைபு

ஆகியவற்றைக் கலந்துரையாடி நயம் பாராட்டி எழுதச் செய்யலாம். பாடலை இசையுடன் பாடச் செய்யலாம்.

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

- மையக் கருத்து
- சொல் நயம்
- பொருள் நயம்
- உவமை நயம்

### பாடப்பகுதி

- மரம்போல் வாழ்

## வளப்பகுதி

### கம்பராமாயணம்

கம்பராமாயணத்தின் முதல் காண்டாமாகிய பாலகாண்டத்தில் முதல் படலமாகிய ஆற்றுப் படலத்தில் மேகம் பரந்து மழை பொழிவதையும், மழைநீரால் சரயு ஆறு பெருக் கெடுத்து ஓடி வருவதையும், ஆற்று வெள்ளத்தில் இயற்கை செழிப்புற்றுச் சிறந்து விளங் குவதையும் கூறும் இப்பகுதியில் இவ் இயற்கை வருணனைப் பாடல்கள் இடம்பெறு கின்றன. கம்பனின் கற்பனைத்திறனுக்கும் சொல்லாற்றலுக்கும் தக்க எடுத்துக்காட்டுக ளாக அமைகின்றன இப்பாடல்கள்.

1) இரத்தினங்கள், தங்கம், மயில்தோகை, யானையின் வெண் தந்தங்கள் முதலான பொருட் களை வாரிக்கொண்டு வருவதால் ஆறானது வணிகர்களை ஒத்திருக்கிறது.

2) முல்லை நிலத்தைக் குறிஞ்சி நிலமாகச் செய்தும், மருதநிலத்தை முல்லை நிலமாகச் செய்தும், நெய்தல் நிலத்தை மருதநிலமாகச் செய்தும்- இவ்வாறு அந்தந்த நிலங்களில் உள்ள பொருட்களை எல்லாம் வேறு வேறு நிலங்களுக்கு எடுத்துச் சென்றது ஆற்று வெள்ளம்.

3) கரும்பாலைகளிருந்து வெளிவந்த கருப்பஞ்சாறு என்னும் தேனும், அரியப்பட்ட நுனி களை உடைய பாளையிலிருந்து தோன்றும் கள் என்னும் தேனும், பழங்களின் சாறு என்னும் தேனும், தேன்கூட்டிலிருந்து ஒழுகுகின்ற தேனும், மக்கள் அணிந்த மலர் மாலைகளிலிருந்து சிந்திய தேனும் ஒன்றாகச் சேர்ந்து கடலில் சென்று சேர்ந்தன. அப் பல்வகைத் தேன்களைக் கடலில் உள்ள மீன்கள் உண்டு களித்தன.

4). வள்ளிக் கிழங்குகளைத் தோண்டி எடுப்பவர்வகள் அவற்றோடு மண்ணில் கலந்துள்ள இரத்தினங்களையும் பெற்றனர். தரையைத் தொடும்படி தாழ்ந்து கிடந்த மாம்பழங் களை ஆமைகள் கவர்ந்து சென்றன. பொன்றி மகரத்தைப் பெற்ற பூக்கள் நிறைந்த புன்னை மரங்களில், தாமரையில் தங்கும் வழக்கம் உள்ள அன்னங்கள் படுத்து உறங்கின. தண் இணை இல் ஆரம்- குளிர்ச்சியானதும் தனக்குச் சமம் இல்லாததுமான சந்தனம் (ஆரம்- சந்தனம்).

## மாதிரி வினாக்கள்

1. புள்ளினத்தைச் சார்ந்தது எது? **(மதிப்பெண் 1)**

அ) கொக்கு ஆ) மீன்

இ) தவளை ஈ) பசு

2. பதிற்றுப்பத்து **(மதிப்பெண் 1)**

i. எட்டுத்தொகை நூல்களில் ஒன்று

ii. பத்துப்பத்துப் பாடல்களைக் கொண்டது

iii. பத்து சேர மன்னர்களைப் புகழ்ந்து பாடுகிறது.

iv. இது ஒரு புறப்பாடல் தொகுதி

அ) i, ii, iii சரி ஆ) i, iii, iv சரி

இ) ii, iii, iv சரி ஈ) அனைத்தும் சரி

3. முல்லையும் , குறிஞ்சியும் முறைமையில் திரிந்து ----- என்பதோர் படிவம் கொள்ளும் **(மதிப்பெண் 1)**

அ) கரந்தை ஆ) மருதம்

இ) பாலை ஈ) உழிஞை

4. மருதம் : இந்திரன் **(மதிப்பெண் 1)**

நெய்தல் : ----------

அ) முருகன், ஆ) சிவன்,

இ) வருணன் ஈ) திருமால்

5. பொருத்துக **(மதிப்பெண் 1)**

| | | |
|---|---|---|
| தேன் எடுத்தல் | - | முல்லை |
| மீன் பிடித்தல் | - | மருதம் |
| நாற்று நடுதல் | - | நெய்தல் |
| ஆநிரை மேய்த்தல் | - | குறிஞ்சி |

6. " பழந்தமிழ் இயற்கை " என்னும் பாடப்பகுதியிலிருந்து அக்காலத்தில் ஐவகை நில மக்களின் வாழ்க்கை நிலையை அறிந்திருப்பாய். அதனை இன்றைய மக்களின் வாழ்க்கைச் சூழலோடு ஒப்பிட்டு ஒப்பீட்டுக் குறிப்பு தயார் செய்க. **(மதிப்பெண் 4)**

7. கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர்------- **(மதிப்பெண் 1)**

அ) இராமாயணம் ஆ) இராம சரிதம்
இ) இராம காவியம் ஈ) இராமவதாரம்

8. "நின்ற பையன்" இத்தொடர் எவ்வகையைச் சார்ந்தது? **(மதிப்பெண் 1)**

அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையொச்சத் தொடர்
இ) வேற்றுமைத் தொடர் ஈ) முற்றுத் தொடர்

9. குழுவில் சேராதது எது? **(மதிப்பெண் 1)**

அ) கார்நாற்பது ஆ) களவழி நாற்பது
இ) ஏர் எழுபது ஈ) ஐந்திணை ஐம்பது

10. முறையான வரிசை எது? **(மதிப்பெண் 1)**

அ) அயோத்திய காண்டம், ஆரண்ய காண்டம், பால காண்டம், யுத்த காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம்

ஆ) அயோத்திய காண்டம், பால காண்டம், ஆரண்ய காண்டம், சுந்தர காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம்

இ) ஆரண்ய காண்டம், அயோத்திய காண்டம், பால காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம், சுந்தர காண்டம்

ஈ) பாலகாண்டம் , கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், அயோத்திய காண்டம், யுத்த காண்டம், ஆரண்ய காண்டம்.